# பிரசாபதி.

புராதன இர்க்குவேதங்களிலே பிரசாபதி என்பவரைப்
பற்றி அடியில் வருங் குறிப்புகளை நாம் காண்கிறோம்.

1. பிரசாபதி என்னும் நாமத்துக்கு, பிரஜைகளின்கர்த்
தர் என்றும், பிரஜைகளைத் தற்காக்கிறவர் என்றும் அர்த்
தமாம். [பட்டார்.

2. அவர், உலகம் உண்டாக்கப்படமுன் செனிப்பிக்கப்

3. அவர், விசுவகர்மா, அல்லது உலகத்தை உண்டாக்
கினவர் என்று சொல்லப்பட்டார்.

4. அவர் பலியை ஏற்படுத்தினார். [பண்ணுகின்றன.

5. அவர் ஏற்படுத்திய பலிகள் பாவத்தை நிக்கிரகம்

6. அவர் தம்மையே ஓர் பலியாக ஒப்புக்கொடுத்தார்.

7. இதினால் அவர் தேவர்களுக்கு நித்தியத்துவத்தைச்
சம்பாதித்தார். [எடுத்தார்.

8. இதை முடிப்பதற்கு அவர் சாவுக்குரிய சரீரத்தை

9. இதினாலே அவர் பாதி அழிவுக்கும், பாதி அழியா
மைக்கும் உரியவராயினார். [று சொல்லப்பட்டார்.

10. அவர் பூரண மனுஷனானபடியால், புருஷன் என்

11. எல்லாரும் அழிவுக்கென்று சேர்ந்து விடப்பட்டா
ர்கள்; ஆகையால் ஒருவர் எல்லாருக்குமாக மரித்தார்.

12. அவர்: நான் சர்வசிருட்டிகளிலே என்னையும், என்
னிலே சர்வ சிருட்டிகளையும் பலியாகச் செலுத்துவேனாக
என்று சொன்னார்.

மேற்கூறப்பட்டிருக்கிறவைகள் மிகவும்வியப்புக்குரிய
குறிப்புகளேயாம். அவற்றை வாசித்தவுடனே, இந்தப்
பிரசாபதி யார்? இவர் எப்போது நரனாய் அவதரித்தார்?
எவ்விடத்திலே தம்மைப் பலியாகச் செலுத்தினார் என்
னுங் கேள்விகள் ஒன்றின்பின்னொன்றாய் மனதிற் கிள
ம்புகின்றன. இவ்வினாக்களுக்கு இந்த நூல்கள் பிரதி
யுத்தரங் கூறுகின்றில. கிறிஸ்தவர்களின் விவிலிய வேத
ம் மாத்திரம், அந்தப் பிரசாபதி யார்? அவர் எப்போது
அவதரித்தார், எவ்விடத்திலே தம்மைப் பலியாக ஒப்புக்
கொடுத்தார் என்பவற்றுக்குத்தரங் கூறுகின்றது. அதிலே
கிறிஸ்துவைப் பற்றிய விபரங்கள், மேற்சொல்லிய வித
மாகவே கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன:

1. அவர் கர்த்தர் என்றும், தமது சனங்களின் பாவங்
களினின்று அவர்களை இரட்சிக்கிறவர் என்னும் கருத்

னுள்ள யேசு என்றும் சொல்லப்படுகிறார். மத். 1: 21.

2. அவர் சர்வ சிருட்டிகளுக்கும் முந்தின பேறுமானவர். கொலோ. 1: 15.

3. அவர் உலகத்தை உண்டாக்கினார். யோவா. 1: 3.

4. இஸ்ரவேலருக்குத்தேவசித்தத்தைவெளிப்படுத்திப் பலிகளைக் கட்டளையிட்டவர் கிறிஸ்து. 1 கொரி. 10: 4.

5. பாவத்தை அகற்றும்படி பலி ஏற்படுத்தப்பட்டது.

6. கிறிஸ்து தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். எபி. 9: 14.

7. இதினால் அவர் தம்மை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்காக அழியாமையைச் சம்பாதித்தார். 2 தீமோ. 1: 10.

8. இதற்காக அவர் மனுஷ சரீரியானார். எபி. 10: 5.

9. இவ்விதமாக அவர் தேவமனுஷனானார். ரோ. 1: 5.

10. அவர் பூரண மனுஷனானபடியால், மனுஷகுமாரனென்று சொல்லப்பட்டார்.

11. எல்லாரும் அழிவுக்குரியவர்களானபடியால் அவர் எல்லாருக்குமாக மரித்தார். 2 கொரி. 5: 14.

12. கிறிஸ்துவை நம்புகிற யாவரும் அவருடனே கூட மரித்திருக்கிறார்கள். ரோம. 6: 8. அதாவது சர்வ சிருட்டிகளும் அவரிலே பலியிடப்பட்டிருக்கின்றன.

சொல்லப்பட்ட இப் பன்னிரண்டு காரியங்களையும், பிரசாபதியைப்பற்றிச் சொல்லிய குறிப்புகளுடன் ஒப்பிட்டு, அவைகள் முன்பின் உள்ளபடி ஒத்திருப்பதைக் காண்கிறோம். இந்தக் குறிப்புகளுள்ள ஒருவர் இந்துக்களுள் எப்போதாவது தோன்றிலர். ஆகையால், கிறிஸ்துவே நமது சனங்களை அவர்கள் பாவங்களினின்று இரட்சிக்கிற உண்மையான பிரசாபதி. பின்னை மேற்சொல்லியவைகள் இந்து வேதாகமங்கள் தேவவாக்கு என்பதை ருசுப்படுத்தவில்லையா என்பார் சிலர். இல்லை, தேவன் மனுக்குலத்தாரைத்தேவவெளிப்படுத்தலில்லாதவர்களாய் விடவில்லையென்பதையும், விவிலியவேதத்தில் எழுதப்பட்டிருக்கிற பிரகாரம் பத்திமான்களுக்குத் தேவன் வெளிப்படுத்தின அதி பூருவ வெளிப்படுத்தல்களை இந்து வேத ஆக்கியோரும் அறிந்திருந்தார்கள் என்பதையும மாத்திரம் அவை அத்தாட்சிப்படுத்துகின்றன. முக்கியமான இச் சத்தியங்களை அவர்கள் தெளிவாய் விளங்கிக் கொள்ளாததினால் அநேக அசத்தியங்களுடன் அவைகளைக் கலந்து எழுதினார்கள். ஈற்றிலே இந்து சமயம் இ

வைகளைக் கவனியாமல் விட்டுவிட்டது.

இதனால் இந்துவேதங்கள் அற்பவெளிப் பளபளப்புடன் தொடங்கி அந்தகாரத்திலே முடிந்தன என்று மோனியர் உவில்லியம்ஸ் சொன்னது மெய்ப்படுகிறது. இந்து வேத கர்த்தாக்கள் வேதங்களை எழுதமுன்னர் மேற்சொல்லிய சத்தியங்களனைத்தும் இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தப்பட்டன. இது, மோசே, தாவீது, சாலொமோன் என்பவர்களால் எழுதப்பட்ட விவிலியநூலின் பகுதிகளில், கருத்தளவாய்க்காணப்படுகிறதினாலே அப்படி விளங்குகிறது. இந்துவேதப்பாட்டுகளில் அதிபூருவமானவைகள் முன்பின் மோசேயிருந்தகாலத்திலேயும் அதற் பிந்தியவைகள் முன்பின் சாலொமோனின் காலத்திலேயும் எழுதப்பட்டன என்பது கல்விமான்களின் தீர்ப்பு.

ஸ்திரீயின் வித்துச் சருப்பத்தின் தலையை நசுக்கும், சருப்பம் அவருடைய குதிங்காலை நசுக்கும் என்று ஆதியிலே சொல்லப்பட்டது. இச் சத்தியமானது, யாரோ ஒருவர் நரனாய் அவதரித்துப் பாடுபடுவதினாலே, பாவத்திற்கு வேராயிருக்கிற சாத்தானைச் செயிப்பார் என்று போதித்தது. அப்பால், பலிகள், ஆதாம் ஏவாளுக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் இந்தக் கருத்தை அதிக துலக்கமாகப் போதித்தன. "தேவன் சேமுடைய கூடாரங்களிலே குடியிருப்பார்" என்று நோவாசொன்னபோது "தேவன் மனுஷனாய் வருவார்" என்னும் கருத்தே அதில் அடங்கியிருந்தது. 2ம் சங்கீதம்: மேசியா தேவனுடைய ஒரே பேறான குமாரனென்றும், தமது சனங்களுக்கு இராசாவும் இரட்சகருமாயிருக்கிறாரென்றும் போதிக்கிறது. சங். 45: 7 ல் அவர் தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்ட தேவனென்றும், சங். 110: 4 ல் ஆசாரியர் அல்லது பலிசெலுத்துகிறவரென்றும் சொல்லப்படுகிறார். நீதி. 8ம் அதி-ல். ஞானம் என்று சொல்லப்படுகிற அவர், உலகமுண்டாக்கப்படமுன் செனிப்பிக்கப்பட்டாரென்றும், உலகமுண்டாக்கப்பட்டபோது அதை இயற்றுங் கர்த்தனாயிருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

விவிலியநூலையன்றி வேதங்களை மாத்திரம் நம்புகிறதினாலே நாம் இரட்சிக்கப்படமாட்டோமா? ஒருவன் இயேசுவைப்பற்றி ஒன்றும் அறியாதவனாயிருந்து, பிரசாபதியை மாத்திரம் நம்பியிருப்பானானால் அவன் இரட்சிக்கப்படுவான். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன்

காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ யாவரையும் மனந்திரும்பக் கற்பிக்கிறார்" என்று வேதம் சொல்லுகிறது:

"இப்பொழுது" என்பது எப்பொழுது? இயேசுகிறிஸ்துவைப் பற்றிய அறிவு வரும்போது இது தொடங்குகின்றது. இப்பொழுது அவர் எல்லாத் தேசங்களிலுமுள்ள யாவருக்கும் கட்டளையாக மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கள் என்று கூறுகிறார். இயேசுவை வேண்டாமென்று தள்ளுவோமானால் பிரசாபதியை வேண்டாமென்று தள்ளுகிறோம். இந்த அறிவு நம்மெல்லாருக்கும் வந்திருக்கிறது. இதற்கு நாங்கள் நம்முடைய கண்களை மூடுவோமா! இப்போது, புத்தியுள்ள எந்த மனுஷனாவது, கிறிஸ்து முன்பின் 2900 வருஷங்களுக்கு முன்னே வந்தார் என்பதை மறுதலிக்க மாட்டான். அவ்வகையே அவர் நல்லவரும் ஞானமுள்ளவருமாயிருந்தாரென்பதையும் மறுக்க மாட்டான். அவர் நல்லவரும் ஞானமுள்ளவருமாயிருந்தார் என்றால் அவர் சொல்லுகிறவைகளை நாம் நம்பவேண்டும். "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், என்னாலன்றியொருவனும் பிதாவினிடத்தில் வாரான்" என்கிறார். தேவன் தேவகுமாரனாய் எப்படி இருப்பாரென்று விசாரிக்க நாம் தரிக்கவேண்டியதில்லை. விவிலிய வேதம் கூறுகிறபடியே இந்துக்களும் அதைப்பற்றி வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். தேவன் எப்படி மனுஷனாயவதரித்தாரென்று நாம் வினவவேண்டியதில்லை. இந்துவேதம் அதைப்பற்றி வற்புறுத்திக் கூறுகிறது. தெய்வீகமுடையவர் பாடுபடவேண்டுமென்பது எப்படியாகும், அல்லது அப்படிச்செய்வது என்ன அவசியமென்று நாம் கேட்கவேண்டியதில்லை. அப்படியேயிருக்கிறதென்று கிறிஸ்தவர்களுடனே இந்துக்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். பிரசாபதியைப் பற்றிய காலவரையறையைக் குறித்து இந்துவேதம் கூறவில்லை. விவிலியநூலோ, கிறிஸ்து பிறந்த காலம் இடங்களுடன் மற்றைய விபரங்களையும் தெளிவாய்க் கூறுகிறது. இவைகள் யாவும் மெய்யென்று திருஷ்டாந்தப்படுத்தப்பட்டிருக்கின்றன.

உண்மையான பிரசாபதியாகிய கிறிஸ்துவை நாம் வேண்டாமென்று தள்ளுவோமா?

---

Strong and Asb ury Printers, Manippay, 1887
First Edition, 5,000